**செ.வெ.எண்: 74** **நாள்: 27.02.2017**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மை செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகை வழங்கும் வகையில் விவசாயிகளின் வங்கி கணக்குகள் மற்றும் பயிர் சேத மதிப்பு குறித்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மை செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.02.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மை செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் கூறியதாவது:

தமிழக அரசு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம், வல்லத்திராக்கோட்டை இந்தியன் ஓவர்ஸிஸ் வங்கியில் உள்ள விவசாயிகளின் வங்கி கணக்குள் விபரம், எம்.எம். 398 குளவாய்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளின் பயிர் கடன் விபரம், பயிர் காப்பீட்டு விபரம், விவசாய நிலங்களின் சேத மதிப்பு மற்றும் பரப்பளவு ஆகிய பல்வேறு விபரங்கள் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டதுடன் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், குரும்பூர் ஊராட்சி, பட்டறைச்சேரி கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் நிலத்தடி நீர் விபரம் குறித்தும் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர்களின் சேத விபரம் மற்றும் விவசாயிகளின் எண்ணிக்கையை சரியாக கணக்கிடவும், வங்கிகளில் விவசாயிகளின் வங்கி கணக்குகள் குறித்த விபரங்களை சரியாக பராமரிக்கவும், குடிநீர் தொட்டியை சுத்தம் செய்து பொது மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மை செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்

இந்த ஆய்வில் திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார் (மா.ஊ.மு), உதவி இயக்குநர் ஊராட்சிகள் (பொ) திரு.முருகண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பொய்யாமொழி, திரு.நாகராஜன், வட்டாட்சியர் திருமதி.பரணி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**